ப்ரும்மஶ்ரீ ஶ்ரீனிவாஸன் அவர்களின் சொற்பொழிவு சாராம்ஸம்:-

காஷ்மீர் பண்டிட்கள், தங்களது சொந்த மாநிலம் விட்டு பிற மாநிலங்களுக்கு புலம் பெயர்வது அல்லது பிற மாநிலங்களில் குடியமர்த்தப்படுவது என்பது Inward migration எனப்படும் உள்நாட்டுப் பிரச்சினையாகும். எனவே, U.N.O. போன்ற சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்லமுடியாத பிரச்சினையாகும். எனினும், பாரம்பரியமிக்க 'ஒரு இனமே அழிவின் எல்லையை தொடும் அபாயத்திலுள்ளது' என்பது மிகவும் விசனிக்கத்தக்கது.

இந்திய துணைக்கண்டத்தின் வடக்கு எல்லையில் உள்ள காஷ்மீரத்திற்கும், தென் தமிழ்நாட்டிற்கும் கலாசார ஒற்றுமைகள் நிரம்ப உண்டு. இதற்கு இரு மாநிலங்களின் பக்தி இலக்கியங்களும், வரலாற்று இலக்கியங்களுமே சான்று. காஷ்மீரின் "பிரத்யப்பிக் ஞான" சைவத்திற்கு இணையாக தமிழக சைவ சித்தாந்தம் இருந்து வந்துள்ளது. தமிழில் பன்னிரு திருமுறைகளும் 14 சாத்திரங்களும், நடைமுறையில் உள்ளன. எல்லா ஆகமங்களும் காஷ்மீரில்தான் தோன்றியதாகக் கருதப்படுகிறது. ஆகமங்களுக்கு காஷ்மீர் ஆகமங்கள் என்றும் பெயர். தமிழக பண்டைய கல்வெட்டுகளில் எந்த அரசர் காலத்தில் என்னென்ன மானியம் வைத்து எந்தெந்த திட்டங்களை தொடங்கினார் போன்ற விவரங்கள் உள்ளன. இதில் முதலில் அரச வம்சத்தின் பெருமையைக் கூறி பின்னர் திட்டம்பற்றிய விளக்கக்குறிப்பு இருக்கும். அரசரின் பெருமையைக் கூறுவது மெய்கீர்த்தி. சமஸ்கிருதத்தில் இதற்கு "பிரசஸ்தி" என்று கூறுவர். இப்பிரஸஸ்திகளை ஆராய்ந்து வரலாற்றுத்தகவல்களை திரட்டியும், காஷ்மீரத்தில் ஏறத்தாழ 200 அரசர்களைப் பற்றியும் அவர்களது காலங்களில் நடைபெற்ற பல்வகை நிகழ்ச்சிகள், திட்டங்கள் பற்றியும் கல்ஹணரின் ராஜதரங்கிணி நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரின் திருக்கோவையார் அடிஒற்றி கல்லாடர் என்பவர் 'கல்லாடம்' என்ற தமிழ் நூல் எழுதியிருக்கிறார். அது சிறந்த புலமையைக் கொடுக்க வல்ல நூல். 'கல்லாடம் படித்தவரிடம் சொல்லாடாதே' என்று ஒரு வழக்குச் சொல் உண்டு. 'ராஜதரங்கிணி' வரலாற்று நூலில் தமிழக காஷ்மீர கலாசார ஒற்றுமைக்கு சான்றுகள் உள்ளன. இதில் 'அந்திவர்மன்' என்ற புலவர்களைப் போற்றிய, அரசனின் காலத்தில் 'பட்ட கல்லாடர்' எனும் சித்த புருஷன் இருந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவரும், மேற்சொன்ன தமிழ்நாட்டு கல்லாடரும் சமகாலத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு மாநிலங்களுக்கிடையே ஆன்மீக ஒருமைப்பாடு இருந்ததற்கு அடையாளமாக தஞ்சாவூரிலிருந்து திருவையாறுக்கு செல்லும் வழியில் ஒரு கிராமத்தில் உள்ள உக்ரபைரவி மூர்த்தி, காஷ்மீரத்தில் சொல்லப்படுகின்ற iconical features கொண்ட மூர்த்தியாகும். என்றும் வழிபாட்டு முறைகளும் traceable to Kashmir என்றும் சமீபத்தில் செய்யப்பட்ட ஒரு ஆராய்ச்சியில் அறியப்பட்டது.

ப்ரும்மஶ்ரீ ஶ்ரீனிவாஸன் அவர்கள் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் தமிழக - காஷ்மீர் கலாசார ஒற்றுமைகளைப்பற்றி விளக்கினார்.

அடுத்து சாஸ்திர சம்பிரதாய ரீதியாகவும், வேதங்களின் அடிப்படையிலும், இரு மாநிலங்களின் கலாசார ஒற்றுமைகளை ப்ரும்மஶ்ரீ V. ரமணசர்மா அவர்கள் விளக்கினார்.